இம்முன்னாள் உறுப்பினரது மறைவால் அவரைப் பிரிந்து வருந்தும் அவர்தம் குடும்பத்ினருக்கு ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் இப்பேரவையின் சார்பிலும் என் சார்பிலும் தெரிவித்துக்கொள்கிறேன்.

மறைந்த இப்பெருந்தகைக்கு மரியாதை செலுத்தும் வகையில் மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று, இரண்டு மணித்துளிகள் அமைதி காக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

(மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று, இரண்டு மணித்துளிகள் அமைதி காத்தனர்.)

2. வினாக்கள்—விடைகள்

உடுக்குறியிட்ட வினாக்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்—விடைகள். வினா வரிசை எண் 75, மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.ஆர். பார்த்திபன் அவர்கள், மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

75—

மின் வசதி

***757**—**திரு. எஸ்.ஆர். பார்த்திபன்:**

மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மேட்டூர் தொகுதி, கொளத்தூர் ஒன்றியம், பாலமலை கிராமத்திற்கு மின் வசதி செய்ய அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

சேலம் மாவட்டம், மேட்டூர் தொகுதி, கொளத்தூர் ஒன்றியம், பாலமலை கிராமத்தில் பாலமலை மேல் அமைந்துள்ள 12 குக்கிராமங்களுக்கு மின் வசதி அமைத்துத் தருவதற்கு சுமார் 12 கி.மீ. தூரம் புதிய மின் பாதை அமைக்கப்பட வேண்டும்.

அதில் 5 கி.மீ. தூரம் வனப் பகுதி வழியாக புதிய மின்சார வழித்தடம் அமைக்க வனத் துறை ஒப்புதல் பெற நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மீதமுள்ள 7 கி.மீ. பட்டா நிலங்களின் வழியாகவும் மின் பாதை அமைக்கப்பட வேண்டும். மேற்படி புதிய மின் பாதை அமைப்பதற்குத் தேவையான மின் கம்பம் மற்றும் தளவாடங்களை எடுத்துச் செல்ல ஏதுவாக மலைமேல் சாலை அமைக்கப்பட வேண்டும். அவ்வாறு சாலை அமைக்கும்பட்சத்தில் பாலமலையிலுள்ள 12 குக்கிராமங்களுக்கு மின் வசதி செய்து கொடுக்க உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.ஆர். பார்த்திபன் அவர்கள்.

திரு. எஸ்.ஆர். பார்த்திபன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேட்டூர் தொகுதிக்குட்பட்ட கொளத்தூர் ஒன்றியத்தில், பாலமலை என்ற ஊராட்சி கடல்மட்டத்திலிருந்து சுமார் 3,500 அடி உயரத்தில் உள்ளது. 22 குக்கிராமங்களைக் கொண்ட அந்த மலையிலே பழங்குடி மக்கள் சுமார் 5,000 பேர் வசித்து வருகின்றனர். இந்தியா சுதந்திரம் அடைந்தக் காலத்திலிருந்து இன்றுவரை எந்த அடிப்படை வசதியும் அங்கு கிடையாது. சாலை வசதி கிடையாது; பள்ளிக்கூடம் இருக்கிறது, ஆனால், ஆசிரியர்கள் கிடையாது; மருத்துவமனை கிடையாது. இப்படியொரு 5,000 மக்கள் அந்தப் பகுதியிலே எந்த அடிப்படை வசதியுமின்றி மோசமான நிலையிலே இருந்து வருகிறார்கள். அதுவும் குறிப்பாக, அந்த 22 குக்கிராமங்களிலே 3 ஆவது வார்டு பெரியகுளம் பகுதிக்கு இதுவரை மின்சார வசதி ஏற்படுத்தப்படவில்லை. சில கிராமங்களிலே மின்சாரம் இருக்கிறது. ஆனால், மின்தடை ஏதாவது ஏற்பட்டால் அதைச் சரி செய்வதற்கு சுமார் 2, 3 மாதங்கள்கூட ஆகின்றன. அங்கே மின் வாரிய அதிகாரிகள் வந்து சரி செய்வதில்லை. காரணம், அங்கே சாலை வசதி இல்லை, எப்படி நாங்கள் வருவது என்று சொல்கிறார்கள். ஆகவே, இந்த நிலை மாற வேண்டும். காரணம் என்னவென்று சொன்னால், எந்த அடிப்படை வசதியுமின்றி, மின்சாரமுமின்றி அந்த மக்கள் ஒரு மோசமான நிலையிலே இருந்து வருகிறார்கள். ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தயவுகூர்ந்து இந்தப் பிரச்சினையில் தனிக் கவனம் செலுத்தி அந்த மக்களுக்கு மின் வசதி செய்து கொடுக்க வேண்டுமென இந்த நேரத்தில் நான் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதுபோல, அந்த மலைப் பகுதிக் கிராமங்களுக்கு, மின் வசதி பெறாத மலைப் பகுதிக் கிராமங்களுக்கு, மின் வசதி பெறுவதற்கு உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டுமென்று மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆணையிட்டிருக்கிறார்கள். அந்த அடிப்படையிலே, இப்பொழுது நமது அரசு, மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு, பல்வேறு தொடர் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது.

முற்பகல் 10–05

அதிலும் குறிப்பாக, வனப் பகுதிகளிலே பணிகளைச் செய்வதற்கு, மத்தியிலே இருக்கின்ற வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறையினுடைய அனுமதி பெறவேண்டிய கட்டாய சூழ்நிலை இருப்பதன் காரணமாக, மத்திய அரசிடம் தொடர்ந்து மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு வலியுறுத்தி வருகிறது. அனுமதி கிடைக்கப்பெற்றவுடன் உடனடியாகப் பணிகள் மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன். அதற்கு சற்று காலதாமதமானாலும்கூட, அதற்கிடையிலே தற்காலிகமாக சூரிய ஒளி மின் சக்தியுடன்கூடிய தெரு விளக்குகளை அமைப்பதற்குரிய நடவடிக்கைகளை அரசு மேற்கொள்ளும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு அன்போடு தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.ஆர். பார்த்திபன்.

திரு. எஸ்.ஆர். பார்த்திபன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்லியதைப்போல, உடனடியாக தனிக் கவனம் செலுத்தி அந்த மலைவாழ் மக்களுக்கு மின் வசதி செய்துகொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, செய்து கொடுக்கப்படும் என்ற உத்தரவாதத்தை அளித்ததற்காக நன்றியைச் சொல்லி விடைபெறுகிறேன். வணக்கம்.

2011 செப்டம்பர் 5]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ந. நஞ்சப்பன்.*

திரு. ந. நஞ்சப்பன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேட்டூர் தொகுதி, கொளத்தூர் ஒன்றியம், பாலமலை பழங்குடி மக்கள் நிறைந்த பகுதியாகும். பழங்குடி மக்களுக்கு வழங்கப்படுகின்ற சிறப்புத் திட்டத்தின்கீழ் அந்தப் பகுதியை வளர்ச்சி பெறச் செய்வதற்கும், மின் இணைப்பு கொடுப்பதற்கும், சாலை வசதி ஏற்படுத்துவதற்கும் சிறப்புக் கவனம் செலுத்தப்படுமா எனத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர், மூலக் கேள்வி மின்சாரம் பற்றியது. சாலை வசதி, மற்ற வசதி பற்றிக் கேள்வி கேட்கிறீர்கள். மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே சொல்லியிருக்கின்றேன். வனப் பகுதியிலே மின் பாதை அமைக்கவேண்டுமென்று சொன்னாலும், சாலை அமைக்க வேண்டுமென்று சொன்னாலும், எந்தப் பணிகளை மேற்கொள்ள வேண்டுமென்று சொன்னாலும், அதுபற்றி மத்திய அரசினுடைய வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறையினுடைய அனுமதி பெறவேண்டிய கட்டாயம் இருக்கிறது. அப்படி மைய அரசிடம், மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு நடவடிக்கைகளை எடுத்து, மேற்கொண்டு தொடர்ந்து முயற்சித்து வருகிறது. மத்திய அரசின் வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறையினைத் தொடர்புகொண்டு அங்கே அனுமதி பெறுவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அந்த அனுமதி கிடைப்பதற்கு, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதுபோல சிறப்புக் கவனம் எடுத்துக்கொள்ளப்பட்டு, ஏற்கெனவே இந்த அரசு பணியாற்றி வருகிறது என்பதை அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. குணசேகரன்.*

திரு. சு. குணசேகரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மின் மாற்றிகள் பழுதடைந்து மின்சாரம் தடைப்படுகின்ற நேரத்தில் மீண்டும் மின் மாற்றிகளை அமைத்து மின்சாரம் வழங்குவதற்கு 10, 15, 20 நாட்கள் ஆகிறது.*

அதனால் கிராமப்புறப் பகுதிகளில் குடிதண்ணீர் கிடைக்காமல் பல்வேறு கடுமையான பிரச்சினைகள் ஏற்படுகின்றன. சிவகங்கை பகுதியில், காஞ்சிப்பட்டியில் 15 தினங்களாக மின்சாரம் இல்லாமல் அந்த மக்கள் குடிதண்ணீருக்கு கஷ்டப்படுவதாக இன்று காலை கூடச் சொல்கிறார்கள். எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், மின் மாற்றிகள் பழுது ஏற்படுகின்ற நேரத்தில் உடனடியாக மின் மாற்றிகளை அமைப்பதற்கான திட்டத்தினை வைத்திருக்கிறார்களா? உடனடியாக மின் மாற்றிகளை கூடுதலாக மாவட்டந்தோறும் வழங்குவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதேபோன்று, மின் அழுத்தமும் ஒரு பிரச்சினையாக இருக்கிறது. அதையும் தீர்ப்பதற்கு அவசர நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கேள்விக்கு நான் பதில் சொன்னால் கேள்வி நேரத்திலே குற்றச்சாட்டு சொன்னதுபோல் அர்த்தம் ஆகிவிடும். இருந்தாலுங்கூட, அதைக் குற்றச்சாட்டாக எடுத்துக்கொள்ளாமல் நான் கொடுக்கின்ற விளக்கமாக ஏற்றுக்கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஏற்கெனவே, கடந்த ஒரு வருட காலமாக சென்ற ஆட்சிக்காலத்தில் மின் மாற்றிகளே கொள்முதல் செய்யப்படவில்லை. அதேபோல, எந்த உபகரணங்களும் கொள்முதல் செய்யப்படவில்லை. வாங்கிய மெட்டீரியல்களுக்கு ஏற்கெனவே 5,000 கோடி ரூபாய்க்கு மேல் பாக்கியும் இருக்கிறது. அதுகூடப் பிரச்சினை இல்லை. ஆனால், இப்போது மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு வந்ததற்குப் பின்பு, மாண்புமிகு அம்மா அவர்கள் பல்வேறு ஆய்வுக் கூட்டங்களை நடத்திய பின்பு, நம்மிடம் மின் மாற்றிகளே இல்லை என்ற நிலையைக் கண்டறிந்து, உடனடியாக அதைக் கொள்முதல் செய்வதற்கு இப்பொழுது ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன. உறுப்பினர் சொன்னதுபோல் மின் மாற்றிகள் தற்சமயம் கைவசம் இருப்பில் இல்லையென்ற காரணத்தால் இதுபோன்ற பிரச்சினை ஏற்படுகிறது. இனி வருங்காலத்திலே இன்னும் 10, 15 நாட்களுக்கு பின்பு, இந்தப் பிரச்சினை வராது. ஏனென்று சொன்னால், கொள்முதல்

2011 செப்டம்பர் 5]

செய்வதற்கான அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டு விரைவாக, போர்க்கால அடிப்படையிலே இப்போது நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. அதிலும் ஒரு டெண்டர் கொண்டுவர வேண்டுமென்றால் சில விதிமுறைகள் இருக்கின்றன. 75 நாட்கள் குறைந்தது அதிலே இடைவெளி இருக்க வேண்டுமென்ற காலக் கட்டாயத்தின் காரணமாக கொள்முதல் பணிகள் தொடங்கப்பட்டுவிட்டாலும்கூட உடனே சப்ளை செய்வதற்கு சில விதிமுறைகள் இடம் தரவில்லை. உடனடியாக சப்ளை செய்ய முடியவில்லை. இன்னும் ஓரிரு வாரங்களுக்குள் அந்தப் பிரச்சினை நிச்சயமாகத் தீர்க்கப்பட்டுவிடும். அதற்குரிய அத்தனை நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டு வருகின்றன என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. வி. மூர்த்தி.

முற்பகல் 10–10

திரு. வி. மூர்த்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பாதம் பணிகிறேன். வணக்கம். மாதவரம் தொகுதியில் சில ஊராட்சிகளில் மின் கம்பங்களில் இருக்கின்ற அந்த மின் கம்பி தாழ்வாகச் சென்று கொண்டிருக்கிறது. கையிலே பிடிப்பதுபோல இருக்கிறது. கடந்த ஆட்சியில் மின்சாரம் வரவில்லை. அதனால், மின் கம்பி தொங்கிக் கொண்டிருந்தால் பரவாயில்லை. அம்மாவினுடைய ஆட்சியிலே மின்சாரம் சீராகச் சென்றுகொண்டிருக்கின்றது. (மேசையைத் தட்டும் ஒலி) ஆதலால், அத்தகைய இடங்களில் இரண்டு மின் கம்பங்களுக்கு மத்தியில் ஒரு புதிய மின் கம்பம் அமைத்துத் தரப்படுமா என்பதை பேரவைத் தலைவர் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சொன்னதுபோல பல்வேறு இடங்களில் அந்தப் பிரச்சினைகள் உள்ளன. மின் கம்பிகள் தாழ்வாக இருக்கின்ற இடங்களில் அவற்றை இழுத்து கொஞ்சம் உயர்த்திக் கட்டுவதற்கும் அல்லது சில இடங்களில்

கம்பங்களையே உயர்த்தி பாதுகாப்பான ஏற்பாடுகளைச் செய்வதற்கும் ஏற்கெனவே நமது மின்சார வாரியம் நடவடிக்கை எடுத்து வருகிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன பகுதியையும் நிச்சயமாகக் கவனித்து அதற்குரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 76, மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் ச. சுந்தரராஜ் அவர்கள். மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.*

76—

பேருந்து நிலையம்

***1332—டாக்டர் ச. சுந்தரராஜ்:**

மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

இராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடியில் புதிய பேருந்து நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

ஆம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் ச. சுந்தரராஜ் அவர்கள்.*

டாக்டர் ச. சுந்தரராஜ்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் 'ஆம்' என்று கூறி உள்ளார்கள். மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கும், மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களுக்கும், பரமக்குடி தொகுதி மக்களின் சார்பில் மனமார்ந்த நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)*

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS